**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~) 173 BNSS.
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8167221

08/AC/2024.

1. District : சேலம் மாவட்டம் | PS: ஊ.த.க. காவல்நிலையம் பிரிவு | Year: 2024. ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 08/AC/2024. | Date: 27.09.2024. நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. | Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) 23.09.2024 சுமார் காலை 11 ம[ணி] 2) 25.09.2024 சுமார் காலை 12-1[5] மணி
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.09.2024. | Time : நேரம் 17.00 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 27.09.2024. | Time : நேரம் 09.00 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2 கி.மீ. தெற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி மாவட்ட கருவூலம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் D. சர்மிலி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு பாஷா.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 45 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் தையல் | (g) Address : முகவரி க.எண் 34/8, வள்ளி நகர், அம்மா பேட்டை, சேலம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. தனபால், கண்காணிப்பாளர், 'F' பிரிவு, மாவட்ட கருவூலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சேலம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப் படுகிறது:

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………….. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………….. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

27/09/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு D.சர்மிளி 27/9/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 27.09.2024
10.00 மணி.

Name: பெயர் M. நல்லம்மாள்,
Rank: நிலை …………………No. எண் ……….
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
சேலம்.

**<u>சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி</u> பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** 26.09.2024-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை சுமார் 17.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, D.சர்மிலி, D/o.தில் பாஷா, க.எண்.34/8, வள்ளி நகர், அம்மாபேட்டை, சேலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல்: D.சர்மிலி, D/o. தில் பாஷா, க.எண்.34/8, வள்ளி நகர், அம்மாபேட்டை, சேலம். பெறுதல்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சேலம். ஐயா,நான் சேலம் அம்மாபேட்டையில் எனது மகன் அபுரோசன் உடன் வசித்து வருகிறேன். நான் B.Com வரை படித்துள்ளேன். எனது அப்பா தில் பாஷா கூட்டுறவு துறையில் சார் பதிவாளர் ஆக இருந்து ஓய்வு பெற்று பென்சன் பெற்றுவந்தார். அவர் கடந்த 30.11.2023-அன்று உடல்நலக் குறைவால் இறந்துவிட்டார். எனது அம்மாவும் கடந்த 16.02.2006-அன்று இறந்துவிட்டார். எனக்கு முருகேசன் (எ) அஸ்ரப் அலி என்பவருடன் கடந்த 08.01.2003 அன்று திருமணம் நடந்து பின்னர் கருத்து வேறுபாட்டால் பிரிந்துவிட்டோம். எனக்கு எங்களது குல வழக்கப்படியும், நீதிமன்றத்திலும் முறைப்படி விவாகரத்து ஆகிவிட்டது. ஆகையால் நான் எனது அப்பாவை சார்ந்து அவருடனே வாழ்ந்து வந்தேன். எனது அப்பா உயிருடன் இருக்கும்போதே அவருடைய சர்வீஸ் புத்தகத்தில் என்னை வாரிசுதாரராக நியமித்து பதிவு செய்துவிட்டார். மேலும் அவர் இறப்பிற்கு பின் குடும்ப ஓய்வூதியம் பெற என்னை வாரிசாக நியமித்து உத்தரவு பெற மனுகொடுத்தோம். ஆனால் எனது அப்பா உயிருடன் இருக்கும்போது அவ்வாறு உத்தரவு போட இயலாது என்று பதிலளித்துவிட்டார்கள். எனது அப்பா இறந்த பின் அவரது இறப்பு ஈமகிரியை செலவிற்காக வழங்கப்படும் ரூ.50,000/- உதவி தொகை மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற முயற்சி செய்தேன். குடும்ப ஓய்வு ஊதியம் பெறுவதற்கான மனுவை துணை பதிவாளர் கூட்டுறவு துறை, சேலம் அவர்களிடம் வழங்கினேன். கூட்டுறவு துறை இணை பதிவாளர் அவர்களிடமும் மனு கொடுத்து அதுகுறித்து பலமுறை இந்த இரு அலுவலகங்களுக்கும் சென்று கேட்டுவந்தேன். ஆனால் பல மாதங்கள் ஆகியும் எனக்கு நிவாரணம் கிடைக்காததால், நான் கடந்த 29.08.2024-இல் முதலமைச்சரின் தனிப்பிரிவு, கூட்டுறவு துறை பதிவாளர்

மற்றும் உணவு மற்றும் கூட்டுறவு துறை செயலாளர் அவர்களுக்கும் மனு அனுப்பினேன். பின்னர் கடந்த 09.09.2024 -ம் தேதி மற்றும் 12.09.2024-ஆம் தேதி ஆகிய தேதிகளில் மாவட்ட கருவூலம், சேலத்தில் இருந்து எனக்கு போன் செய்து நான் குடும்ப ஓய்வூதியம் சம்பந்தமாக கூட்டுறவு துறை பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய மனு நடவடிக்கை எடுக்க தங்களுக்கு அனுப்பபட்டுள்ளதாக என்னை விபரம் கேட்டார்கள், மேலும் எனக்கு கடிதம் அனுப்பப்படும் என்றும் ஒரு வாரம் கழித்து வந்து பார்க்க சொன்னார்கள். ஆனால் எனக்கு மாவட்ட கருவூலத்தில் இருந்து கடிதம் எதுவும் வரவில்லை. ஆகையால், நான் 23.09.2024-ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு மாவட்ட கருவூலத்திற்கு சென்று எனக்கு போன் செய்திருந்த தாரணி என்ற அலுவலரை பற்றி கேட்டேன். அவர் மீட்டிங் சென்றுள்ளதாக சொன்னார்கள். அவர் இருக்கை அருகே காத்திருந்தேன். அப்போது அங்கிருந்த பின்னர் பெயர் விபரம் தெரிந்த "F" பிரிவு கண்காணிப்பாளர் திரு.தனபால் அவர்கள் என்னிடம் விபரம் கேட்டார். நான் எனது அப்பாவின் பென்சன் புத்தகம் மற்றும் இதர விபரங்களை அவரிடம் காண்பித்து எனது அப்பாவின் இறப்பிற்கு ஈமகிரியை உதவி தொகை ரூ.50,000/- மற்றும் எனக்கு குடும்ப ஓய்வூதியம் பெறுவது சம்பந்தமாக வந்துள்ளதை தெரிவித்தேன். அவர் எனது ஆவணங்களை பார்த்துவிட்டு, உதவித்தொகை ரூ.50,000/- மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்றுவிடலாம், அதற்கு கொஞ்சம் செலவாகும் என்று தெரிவித்தார். மேலும் என்னிடமிருந்து பெற்ற ஆவணங்களை அவரே வைத்துக்கொண்டு புதன்கிழமை வாங்க நான் படிவங்கள் தயார் செய்து வைக்கிறேன். நீங்க வந்து கையெழுத்து போட்டுவிட்டு போங்க எவ்வளவு செலவாகும் என்று அப்போது சொல்வதாக தெரிவித்தார். அதன்படி நான், 25.09.2024-ஆம் தேதி புதன்கிழமை பகல் சுமார் 12.15 மணிக்கு திரு.தனபால் அவர்களை அவரது அலுவலகத்தில் சென்று சந்தித்தேன். அவர் என்னிடம் படிவங்களில் கைரேகை மற்றும் கையெழுத்துக்கள் பெற்றார். அந்த கோப்புகளை தயார் செய்து மாநில கணக்காளர் அவர்களுக்கு அனுப்புவதாகவும் ஒரு நகல் கூட்டுறவு இணை பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிவைப்பதாகவும் அதற்காக ரூ.5,000/- தனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை கடன் வாங்கி கொண்டுவந்துதான் கொடுக்கவேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் விரைவில் பணம் ஏற்பாடு பண்ணி எப்போது வேண்டுமானாலும் அலுவலகம் வந்து என்னிடம் கொடுங்க, உங்களுக்கு கிடைக்கவேண்டிய உதவித்தொகை ரூ.50,000/- மற்றும் குடும்ப ஓய்வூதியம்

ஆகியவற்றை விரைவில் பெற ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னார். நான் பணம் ஏற்பாடு செய்துகொண்டு வருவதாக தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். எனக்கு மாவட்ட கருவூல "F" பிரிவு கண்காணிப்பாளர் திரு.தனபால் கையூட்டாக கேட்ட பணத்தை கொடுத்து எனது அப்பாவின் ஓய்வூதிய பலன்களை பெற விருப்பமில்லை. எனவே மாவட்ட கருவூல "F" பிரிவு கண்காணிப்பாளர் திரு.தனபால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு(ஒப்பம்/-xxxxxx (D.சர்மிலி) 26/09/2024.

Sir, Received the above computer typed report on 26.09.2024 at 17.00 Hrs. The genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from the Directorate of Vigilance and Anti-Corruption and registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.08/AC/2024 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 27.09.2024 at 09.00 hrs. Sd xxxx (M.Nallammal) 27/09/2024, Inspector of Police, V & AC, Salem.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சேலம் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

(M.நல்லம்மாள்) 27/09/2024
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.